பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

13 03 2024 **WEDNESDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. ஷெட்யூல்டு மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்த தொழில் முனைவோர் கடனுதவி பெறுவதற்கான **PM Suraj** இணையதளத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தொடங்கிவைத்தார்.

2. ஆகாஷ்வாணி, தூர்தர்ஷன் செய்திப்பிரிவுகளில் மேம்படுத்தப்பட்ட இணையதளங்களை மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அனுராக் தாக்கூர் இன்று தொடங்கிவைத்தார்.

3. கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, நீலகிரி மாவட்டங்களில் ஆயிரத்து 273 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

4. தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளில் கட்டண படுக்கை வசதி படிப்படியாக தொடங்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு மா.சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

5. **Orleans** மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் **Aishith Surya – Amrutha Pramuthesh** இணை முன்னேறியுள்ளது

---- *இனி விரிவான செய்திகள்* ---

**<<<<<<<<>>>>>>>**

நாடு முழுவதிலும் உள்ள பின்தங்கிய வகுப்பினருக்கு கடனுதவி வழங்கும் திட்டத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று காணொலி வாயிலாக தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில், ஷெட்யூல்டு வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் உள்ளிட்ட பிரிவுகளை சேர்ந்த ஒரு லட்சம் தொழில் முனைவோருக்கு கடனுதவிகளையும் பிரதமர் வழங்கினார்.

கடனுதவி பெறுவதற்கான **PM Suraj** இணையதளத்தையும் பிரதமர் இன்று தொடங்கிவைத்தார்.

நாடு முழுவதிலும் மூன்று லட்சத்திற்கும் மேற்பட்ட பயனாளிகள் பங்கேற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக பிரதமர் பங்கேற்றார்.

துப்புரவுப்பணியாளர்களுக்கு ஆயுஷ்மான் சுகாதார அட்டைகள் மற்றும் பாதுகாப்பு ஆடைகளையும் பிரதமர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், பல ஆண்டுகளாக நாட்டை ஆண்டவர்கள் எதிர்காலத்திற்கான திட்டமிடலை மேற்கொள்ளவில்லை என்றும், கடந்த பத்தாண்டுகளில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு இதனை சிறப்பாக செய்து வருவதாகவும் கூறினார்.

புதிய மாற்றங்கள் கொண்டுவரப்பட்டிருப்பதாகவும், ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

பிரதமர் பயனாளிகளுடன் காணொலி வாயிலாக பங்கேற்ற நிகழ்ச்சியில், திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி கலந்துகொண்டார்.

<<<<<<<<>>>>>>>

ஆகாஷ்வாணி, தூர்தர்ஷன் செய்திப்பிரிவுகளில் மேம்படுத்தப்பட்ட இணையதளங்களை மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அனுராக் தாக்கூர் இன்று தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர், பல ஆண்டுகளாக பிரசார் பாரதியின் இந்த இரு மின்னணு ஊடகங்களும் இணையதளம் வாயிலாக தனது சேவையை மக்களுக்கு அளித்து வருவதாக தெரிவித்தார்.

தற்போது மாநில மொழிகளிலும் இதன் சேவைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

பிரசார் பாரதியின் காணொலிகள், புகைப்படங்கள், ஒளிப்பதிவு மற்றும் எழுத்து வடிவிலான தகவல்களை உடனுக்குடன் பகிர்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கோவிட் பெருந்தொற்று காலத்தில் ஆகாஷ்வாணியும், தூர்தர்ஷனும் மக்களுக்கான தகவல்களை சிறப்பாக அளித்ததாக அவர் குறிப்பிட்டார்.

ஆகாஷ்வாணியின் ‘’**newsonair** ’ செயலி செய்திகளையும், அரசின் திட்டங்களையும் மக்களுக்கு கொண்டு சேர்ப்பதில் மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும் திரு அனுராக் தாக்கூர் தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>>

தமிழகத்தில் மாநில அரசு மேற்கொண்டுவரும் திட்டங்களால் தொழில் வளமும், வேலைவாய்ப்பும் பெருகியுள்ளதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் ஆயிரத்து 273 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டப்பணிகளை தொடங்கிவைத்து பேசிய அவர், கடந்த மூன்றாண்டுகளில் மகளிருக்கான திட்டங்கள், கல்வி வளர்ச்சிக்கான திட்டங்கள் மற்றும் மக்களின் உடல்நலன் காக்கும் திட்டங்களும் கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மக்களுக்கான திட்டங்கள் சென்றடைவதில் மாநில அரசு கவனத்துடன் செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இந்த மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வேறு வளர்ச்சிப்பணிகளையும் முதலமைச்சர் பட்டியலிட்டார்.

தமிழகத்தில் வனவிலங்குகளால் தாக்கப்பட்டு உயிரிழப்பவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத்தொகை பத்து லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கோவை மாவட்டம் பொள்ளாச்சி பகுதியில் தென்னை வேர் வாடல் நோயால் பாதிக்கப்பட்ட மரங்கள் 16 கோடி ரூபாய் செலவில் வெட்டி அகற்றப்படும் என்றும், புதிதாக மூன்று லட்சம் தென்னங்கன்றுகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும் என்றும் அறிவித்தார்.

மின்னணு தேசிய வேளாண் சந்தை மூலம், வெளிமாநிலங்களில் உள்ள வணிகர்களுக்கு தமிழகத்தில் விளையும் தேங்காயை விற்பனை செய்வதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தித்தரப்படும் என்றும் முதலமைச்சர் அறிவித்தார்.

கோவை மாவட்டத்தில் பழங்குடியினர் வசிக்கும் மூங்கில் மடை குட்டை பகுதியில் சிறு பாலம் மற்றும் வடிகால் அமைத்துத்தரப்படும் உள்ளிட்ட அறிவிப்புகளை வெளியிட்டார்.

ஈரோடு மாவட்டத்தில் 20 கோடி ரூபாய் மதிப்பில் காய்கறி மளிகை சந்தை வளாகம், திருப்பூர் மாவட்டத்தில் 11 கோடி ரூபாய் மதிப்பில் பாலங்கள், நீலகிரி மாவட்டத்தில், அரசு தாவரவியல் பூங்காவை உலகத்தரத்திற்கு இணையாக மேம்படுத்துவது உள்ளிட்ட அறிவிப்புகளையும் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.

<<<<<<<<>>>>>>>>

மருத்துவத்துறையில் தமிழகம் நாட்டிலேயே சிறந்து விளங்குவதாக மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு சி வி கணேசன் கூறியுள்ளார்.

விருதாச்சலம் அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டி பேசிய அமைச்சர், ஐந்து தளங்களுடன் அமைக்கப்பட உள்ள இந்த புதிய கட்டிடத்தில் குருதி வங்கி, டயாலிசிஸ் உள்ளிட்ட மருத்துவ வசதிகள் அமைத்துத்தரப்பட உள்ளதாக தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>>

அனைத்து மாவட்ட அரசு மருத்துவமனைகளிலும் கட்டண படுக்கை வசதி படிப்படியாக தொடங்கப்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

கோவை அரசு மருத்துவமனை வளாகத்தில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடங்களை இன்று பார்வையிட்ட அமைச்சர், இந்த மருத்துவமனையில் 26 கட்டண படுக்கையறைகள், 100 தீவிர சிகிச்சைக்கான படுக்கைகள், 300 படுக்கை வசதிகள், 10 அறுவை சிகிச்சை அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

புற்றுநோயை துல்லியமாக கண்டறிவதற்கு கோவை, சேலம், திருநெல்வேலி, தஞ்சாவூர், காஞ்சிபுரம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் பெட் சி டி ஸ்கேன் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கோவை அரசு மருத்துவமனையில் மழைநீர் தேங்குவதை தடுக்க வடிகால் அமைக்கப்பட்டுள்ளதாகவும் திரு மா. சுப்பிரமணியன் கூறினார்.

<<<<<<<<>>>>>>>

மக்களவைத் தேர்தலில் தவறாமல் வாக்களித்து ஜனநாயக கடமையை உறுதி செய்ய வேண்டும் என்று பிரபல நாட்டிய கலைஞர் பத்மவிபூஷன் திருமதி பத்மா சுப்பிரமணியம் கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னை வானொலிக்கு அவர் அளித்த பேட்டியில், வலிமையான பாரதத்தை உருவாக்க நாம் ஒவ்வொருவரும் வாக்களிக்க வேண்டியது அவசியம் என்று கூறினார்.

*(சவுண்ட் பைட் - பத்மா சுப்பிரமணியம் - 51 செகண்ட்ஸ்)*

<<<<<<<<>>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

நெல்லை, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கான தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் அலுவலகத்தை சட்டப்பேரவைத் தலைவர் திரு அப்பாவு இன்று நெல்லையில் திறந்துவைத்தார்.

----------------

தருமபுரி புறநகர் பேருந்து நிலையத்தில் இருந்து, வத்தல் மலைப்பகுதிக்கு மகளிர் கட்டணமில்லா பயணத்திற்கான முதல் பேருந்தினை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு அதுல் ஆனந்த் இன்று தொடங்கிவைத்தார்.

----------------

சிவகங்கை மாவட்டத்தில் வரும் வெள்ளிக்கிழமை தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளதாக மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

-----------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்ற அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கு "திறன் பலகைகளை" மாவட்ட ஆட்சியர் திரு தர்ப்பகராஜ் வழங்கினார்.

-------------

திருவள்ளூர் மாவட்டத்தில், அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், கவரப்பேட்டை அரசு பள்ளி மாணவர்களின் பேரணி இன்று நடைபெற்றது

------------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் 127 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று வழங்கினார்.

------------------

ராணிப்பேட்டை மாவட்டத்தில் 100 சதவீத வாக்களிப்பை வலியுறுத்தும் வகையில் மாணவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

-------------------

அரியலூர் மாவட்ட வனத்துறை சார்பில் சுற்றுச்சூழலை பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

<<<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**Orleans** மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் **Aishith Surya – Amrutha Pramuthesh** இணை முன்னேறியுள்ளது.

பிரான்சில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 21-12, 21-16 என்ற செட் கணக்கில், இஸ்ரேலின் **Misha Zilberman – Svetlana Zilberman** இணையை வென்றது.

மற்றொரு ஆட்டத்தில், சதிஷ் கருணாகரன் - **'Aadya Variyath '** இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

<<<<<<<<END>>>>>>>